# <u>(சார்பு நீதிமன்றம்) செஞ்சி</u>

**ஓ.எஸ்.எண்.223/2022** **நாள்.16.03.2026**

2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 16 நாள் வாதி தரப்பு 3 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஏழுமலை | தொழில் | |
| த. பெ./க.பெ. | முனியன் | சாதி | |
| கிராமம் | சிங்கவரம் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 52 |

**<u>வா.சா.3</u>**

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் 9-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். விவசாயம் செய்து வருகிறேன். அது தவிர இரும்பு கடையில் வேலை செய்கிறேன். என் சொந்த ஊர் சிங்கவரம். வாதி எனக்கு துாரத்து உறவினர். வாதி அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்தேனா என்றால் ஆமாம். வழக்குரை மற்றும் பதிலுரை விபரங்கள் தெரியாது. பிரதிவாதியை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, சந்தைமேட்டில் அவ்வப்போது அவரை பார்ப்பேன். பிரதிவாதி என்ன வேலை செய்கிறார் என்ற விபரம் குறித்து தெரியுமா என்றால் நான் வேறு ஊர் என்பதால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எனக்கும், பிரதிவாதிக்கும் பழக்கம் எதுவும் கிடையாது. வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியாக கையெழுத்து செய்தேன். வாதியின் வீட்டில் வைத்து தான் சாட்சி கையெழுத்து போட்டேன். கையெழுத்து போடும் போது நானும், வாதியும் மட்டும் தான் இருந்தோமா என்றால் நானும், வாதியும், பிரதிவாதி மற்றும் ஜெயச்சந்திரன் ஆகியோர் இருந்தோம். எனக்கு முன்பாக வழக்கில் வாதியும், ஜெயச்சந்திரனும் சாட்சியம் அளித்துள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. ஜெயச்சந்திரன் தன்னுடைய சாட்சியத்தில் அப்போது அவரும், வாதியும் மட்டுமே இருந்ததாக சொல்லியுள்ளார் என்றால் 4 பேரும் இருந்தோம். எனவே ஜெயச்சந்திரன் அவ்வாறு சொல்லியிருந்தால் அது பொய். நான் தமிழில் தான் சாட்சி கையெழுத்து செய்தேன். புரோநோட்டை ஜெயச்சந்திரன் எழுதினார். ஜெயச்சந்திரனும், வாதிக்கு வேண்டப்பட்டவர் என்றால் அவருக்கு பழக்கமானவர். பாண்டு பேப்பரில் முழுக்க ஜெயச்சந்திரனே எழுதினார். பச்சை பேப்பரில் முழுக்க அவரே எழுதினாரா என்றால் ஆமாம். ஜெயச்சந்திரன் என்ன படித்துள்ளார் என்பது பற்றி தெரியாது. ஜெயச்சந்திரன்

புரோநோட்டில் கையெழுத்து போட்டாரா என்றால் அவரும் கையெழுத்து போட்டார். ஜெயச்சந்திரனின் தந்தை பெயர் தெரியுமா என்றால் தெரியாது. வாதி செஞ்சி ராஜேந்திரன் நகரில் குடியிருக்கிறார். பிரதிவாதி எங்கு குடியிருக்கிறார் என்றால் செஞ்சியில் குடியிருப்பதாக சொன்னார்கள். பிரதிவாதி தமிழில் கையெழுத்து செய்தாரா, ஆங்கிலத்தில் கையெழுத்து செய்தாரா என்று நினைவில்லை. பிரதிவாதியின் தகப்பனார் பெயர் தெரியாது. வாதியின் தந்தை பெயர் ஏழுமலை. வாதி என்னுடைய உறவினர் என்பதால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேனா என்றால் ஆமாம். உறவினர் என்பதால் சாட்சியம் அளிக்க அழைத்தார். 05.09.2019 அன்று தொகை கடன் பெறும் போது தான் புரோநோட் எழுதப்பட்டது. நான் சாட்சி கையெழுத்து செய்ததாக சொல்லும் புரோநோட்டை பின்னிட்டு எப்போது பார்த்தேன் என்றால் அதன் பிறகு பார்க்கவில்லை. பிரதிவாதி என் முன்னிலையில் பணம் எதுவும் வாங்கவில்லை என்றாலும், கையெழுத்து எதுவும் செய்யவில்லை என்றாலும் வாதி உறவினர் என்பதால் வழக்கிற்கு ஆதரவாக தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. பாஷா மற்றும் முபாரக் ஆகியோர் பணம் வாங்கியதற்கு தான் நான் சாட்சி கையெழுத்து செய்தேன். வேறு எந்த பரிவர்த்தனைக்கும் நான் சாட்சி கையெழுத்து செய்யவில்லை. வாதி என்ன தொழில் செய்கிறார் என்றால் தெரியாது. வாதி எதுவரை படித்துள்ளார் என்றும் தெரியாது. நான் தனிப்பட்ட ஆதாயத்திற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.